# MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED ON 28.08.2024 AT 11.00 AM AT CHOLIYA VELLALAR URAVIN MURAIKKU PATHIAPPATTA ANNATHANA MANDAPAM, BALASUBRAMANIYAR KOVIL VALAAGAM, THUMALAPATTI, NILAKOTTAI, DINDIGUL FOR THE PROPOSED COMMON BIO-MEDICAL WASTE TREATMENT FACILITY-19 TPD (6835 TPA) OF M/S DINDIGUL WASTE MANAGEMENT PVT. LTD., AT SURVEY NO: 133/1A2 AND 154/11, NOOTHULAPURAM VILLAGE, TALUK - NILAKOTTAI, DISTRICT-DINDIGUL.THIS PROPOSED PROJECT IS SUBJECT TO OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FROM THE TAMIL NADU STATE ENVIRONMENTAL IMPACT ASSESSMENT AUTHORITY

**Participants:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Thiru.R. SAKTHIVEL | : | The Revenue Divisional Officer,<br>Dindigul District |
| 2. | Dr.R.GUNASEKARAN | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Dindigul District |
| 3. | Thiru.T.DHANUSHKODI | : | Tahsildar,<br>Dindigul District |
| 4. | Thirumathi. ANITHA | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution control Board,<br>Dindigul District |
| 5. | Thirumathi.P.VIJAYALAKSHMI | : | Director ,<br>M/S.DindigulWaste Management Pvt. Ltd |
| 6. | Thiru.G.MUTHUKUMARAN | : | EIA Consultant,<br>M/s. Perfact EnviroSolutions Pvt.Ltd,<br>New Delhi |
| 7. | Public | : | _______ Nos. (List enclosed as Annexure) |

The Revenue Divisional Officer, Dindigul District, presided over the public hearing regarding the proposal submitted by M/S.Dindigul Waste Management Private Limited. The company propose to establish a "Common Biomedical Waste Treatment Facility with a Capacity of 19TPD (6835 TPA)" on a 0.7165 hectare (1.77 acres) plot of land, survey numbers 133/1A2 and 154/11, located in Noothulapuram village, Nilakottai Taluk, Dindigul District. This public hearing was conducted to obtain environmental clearance from the Tamil Nadu State Environmental Impact Assessment Authority.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dindigul District welcomed the Dindigul District Revenue Divisional Officer, Nilakottai Taluk Tahsildar , Police Departmental officials, Media, Social & Environmental activists and all the general public who have attended the Public Hearing for the proposed facility for Common Bio-Medical Waste Treatment Facility - 19 TPD (6835 TPA) at Survey No: 133/1A2 and 154/11 Noothulapuram Village, Taluk - Nilakottai, District- Dindigul, State- Tamil Nadu . He explained about the requirement of an Environmental Clearance (EC) under Category: B1 for Schedule Activity 7d(a) of EIA Notification 2006 to be obtained from the Tamil Nadu State Level Environmental Impact Assessment Authority for the proposed project. He added that the public notice informing about conducting of Public Hearing was published in Tamil and English dailies, such as, "Dinakaran" and "New Indian Express" dated 04.07.2024. He also added that in addition to these notification, special notices were displayed at Panchayat Office, Taluk office and other Government offices in the area. A week before conducting the Public Hearing, pamphlet were distributed, announcement were made through mic and speaker mounted vehicle in all surrounding villages. He announced that on behalf of the project proponent, the proponent's EIA consultant will make presentation about the project and after the power point presentation the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dindigul District also stated that the meeting is fully video & audio recorded from beginning to end and all views of the public will be sent to the Tamil Nadu State Level Environmental Impact Assessment Authority along with the minutes of the meeting for decision making. He added that this meeting is only to record and register the views of all public and no decision will be taken here. He also stated that the public who are willing to represent their

view in writing can also submit the petitions to the Revenue Divisional Officer at the end of the meeting and the same will also be added to minutes of meeting of Public Hearing and forwarded to the Tamil Nadu State Level Environmental Impact Assessment Authority.

The Revenue Divisional Officer addressed the public and explained the process of conducting Public Hearing and he mentioned that everyone who have attended the meeting today will be given equal opportunity to express their views /concerns freely. In order to give time to all, he advised public to be short and to the point.

Thereafter, Thiru.G.Muthukumaran, EIA Consultant, M/s.Perfact Envirosolutions Private Limited, NewDelhi, made presentation about the Proposed Common Bio-Medical Waste Treatment Facility - 19 TPD (6835 TPA) to the public along with Environmental Impact Assessment study results and mitigative measures in place and are going to be implemented on account of proposed Treatment. He also presented the proposed Environmental Management Plan and monitoring plan. He also explained the allocation of Corporate Environmental Fund @ INR 5 Lakhs for the development of the neighboring villages.

Following the PowerPoint presentation about the project made by the EIA consultant, the Revenue Divisional Officer, Dindigul District informed the public to come forward and speak in the mike expressing their views about the proposed Treatment Facilty project. The views and the opinion of the public are given below:

**Mr.Gopal from Thummalapatti Village**

Hello everyone, my name is Gopal from Thummalapatti village. Burning or treating medical waste will definitely harm the environment. Therefore, this project is not needed in this area. There are Pollution Control Board Authorities here; how can ordinary people know what they don't? This meeting is just for show. I am saying this beforehand that this will cause harm. Our bodies are already affected by this. I request the Government to make a good decision about this. Thank You.

**Mrs.Indirani from S.Thummalapatti Village**

My name is Indrani. I am from S. Thummalapatti village. In our area, there are many

Livestock like goats and cows. Sometimes, many animals die. These dead animals should also be properly handled in this treatment center. This will be very beneficial to the people of this area. It will create more job opportunities for most people. So, I welcome this facility, Thank you.

**Mr.Jayamanikandan from S.Thummalapatti Village**

My name is Jayamanikandan from S.Thummalapatti village. This district is already underdeveloped and Thummalapatti in particular lacks proper water management. Given our reliance on agriculture and livestock for our livelihood, we don't need this project. We are speaking on behalf of Thummalapatti to say that we do not want this medical waste treatment plant. This is because not only will the environment be affected by medical waste, but our livestock will also be harmed, which in turn will affect humans. Therefore, we do not need this project. Thank you.

**Mr.Karupasamy from S.Thummalapatti Village**

Greetings. My name is Karuppasamy from S.Thummalapattivillage. In our Tamil Nadu, 45% of medical waste is generated and this accounts for 700 tons of medical waste in India. How is this being managed? Furthermore, medical waste from Kerala is being dumped daily in our Tamil Nadu border areas. What actions have our authorities taken? What steps has our Tamil Nadu Government taken? At a time when people in this area rely solely on agriculture, establishing medical waste companies will harm the people. Moreover, the groundwater has become unfit for drinking. Not only that, but children and the elderly are also severely affected. In addition, agricultural land will be severely affected in the future. For example, on the road from Dindigul to Vathalakundu, there is a Leather Factory. For only one year now, the water has been stagnant. Before that the water used to flow freely. What action did the authorities take for this? If you go there now, the workers in the leather industry do not have proper safety measures and as a result, their families are affected. In such a situation, why is a medical waste facility? Which is currently unnecessary for the people in the Noothulapuram village people. Why it is being set up in Noothulapuram village in Dindigul, Karur, and Salem districts, why is it not being set up there? People can set up their companies 50 kilometers away. This is very harmful to the people.

Now, if the authorities ask the people personally, they will say that they don't know because they are illiterate. Now, they displayed that they have distributed the Pamphlet to the village people. To whom did you give the notice? If you gave it only for 4 shops, is it enough? What about the people in the Village people? Why didn't you go and give it to Village people? I don't know the reason for that. Through this, the authorities should take understandable action. Such a company is not needed for these people here. Now they said that they will make ten trips a day on this road. These 10 trips will come and go regularly. For one day trip comes and goes, it for three times. If you put it as by 2, this vehicle comes and goes 30 times. But if this company starts, it will come and go even 60 times. If you go and complain to the Authority, they will say that you should have told this earlier. This is a true fact because these people rely solely on agriculture. They do not rely on other small businesses or anything else. The village leaders do not fully know the situation in each village. Now, when you ask the people here why you came, they don't know because that's what they have been told to say. I went through this realistically, and only then did I realize. I'm a person with little education, realize this now only, how will the illiterate people know? Because of this, we don't get water, we can't use water properly and people are very affected. Children are also affected. The authorities should immediately cancel the project. Otherwise, this will become a people's protest in front of the District Collector. Thank you.

**Mr.Kumaresan from Michael Palayam**

My name is Kumarasamy and I come from a village called Michaelpalayam, which is located in Nilakottai to Sempatty Road. I come from a farming family. All five people in our household are involved in farming, but we don't have a sufficient income from farming. We have often asked the central and state Government for employment opportunities. Whatever jobs they suggest, for example, now that it's raining, people are getting fever and going to hospitals where they get injections and glucose. How do they clean the used needles and other waste? Do they separate and reprocess them or do they dispose of them by burning them? That is harmful to farmers. The temperature of our Mother Earth is escalating at an alarming rate, similar to the intense heat produced by fires. Healthcare is indispensable and the waste generated from contemporary lifestyles and economic conditions requires careful management. Detailed guidelines have been presented on the

categorization and processing of different types of waste. As times change, it is crucial to refine our waste management processes. Earlier, we had simple cell phones, but now we have digital ones. If everything is harmful, then everything is harmful.

**(There was a small commotion)**

**District Environmental Engineer,** Addressed the public in the Arena, Please remain quiet, everyone. Please remain quiet. He has the right to speak, so let him speak. Please be seated. Please be seated.

**Revenue Divisional Officer,** Addressing the public in the Arena, Please be quiet. This meeting is not to implement the project; it's solely to hear your opinions. If this project eventually comes here, you can protest or do whatever you want. Right now, this is just the public hearing. Everyone here can only express their opinions. We will consider all your opinions and the Government will make a decision based on the majority. Remember that they have only applied for this project; it's not going to be implemented immediately. This is just a public hearing to gather your opinions. Please be quiet.

**Mr.Suresh Kumar (Advocate) from S.Thummalapatti Village**

That's right, sir. This is the public hearing. People from Noothulapuram village should be allowed to express their opinions. This is our condition. If this factory comes to Noothulapuram, it is Thummalapatti village that will be affected. People from Michaelpalayam will come here to work and then leave. But it is Noothulapuram village that will suffer the consequences. This is because we depend on our livestock like goats and cows for our livelihood. That's why we don't want this project. If people from Michaelpalayam want this project, the majority of people in Noothulapuram village are against it. We will not accept the demands of people from Michaelpalayam. Let the people of Noothulapuram speak up if they want it. We say that the company people have brought people from Michaelpalayam here. Noothulapuram is made up of 9 villages. Let the people who live in these villages express their opinions. People from other areas should not be allowed to speak here.

**Mr.K.Marimuthu from S.Thummalapatti Village**

This is the path through which the water from Kamarajar Dam flows. It passes through the Noothulapuram River bed. So, this factory will contaminate the water. Therefore, we don't need this factory.

**(There was a small commotion)**

**District Environmental Engineer,** Addressing the public in the Arena, Does anyone else wish to speak? If you have anything to say, please come forward. If anyone has written petitions, they can submit them to the Revenue Divisional Officer.

**Mr.Suresh Kumar (Advocate) from S.Thummalapatti Village**

Please be quiet, everyone. Let's first raise awareness among the people. The authorities should explain the negative impacts of this project on the people and the districts that will be affected before asking for public opinion. They should inform us about the diseases that could arise from this medical waste and how the nearby villages will be affected. A similar incident happened in Virudhunagar, where the people are now under a stay order. The High Court allowed the factory to open, but most of the people there are now affected by diseases. The waste is burned and the smoke is released through a pipe. This pollutes both water and air. We are farmers and our agriculture will be affected. We don't know what kind of impact this will have on us because we are uneducated. Government officials should explain the project in detail, highlighting both the losses and benefits. Only after they explain how they will purify the waste and transport it to the factory should we express our opinions. Thank you."

**District Environmental Engineer,** Addressing the public in the Arena that the Female participants are invited to contribute their perspectives.

**(No one has shown up)**

**Revenue Divisional Officer,** Addressing the public in the Arena Please be quiet. As I mentioned earlier, an application has merely been submitted for this project. It has not yet been approved or brought to your village. We are here to inquire about your preference

regarding this project and the potential impacts it may have. Your opinions will be conveyed to the Government. Therefore, please express your views clearly. The project will not be implemented immediately. Please allow those who wish to speak to finish their statements

**Mr.K.Marimuthu from Thummalapatti Village**

The people of Noothulapuram village use the water that comes from the Kamarajar Dam via Sengattampatti for irrigation. If this water becomes polluted tomorrow, the people of Noothulapuram village will be severely affected. Nearby, in Sempatty village, a small flour mill was started. Now, it has grown significantly. It is located near the National Highway, and many accidents have occurred due to this, but the authorities have not taken any notice.The people of Sempatty village now have to buy drinking water for Rs. 20 per day. Since the flour mill started, the groundwater has been completely depleted. Therefore, since there are water bodies near this village, there is a threat of groundwater contamination and the spread of diseases. We do not need this factory.

**Mr.Venkatesh , Environmentalist :**

Respected Sir/Madam, Good morning, my name is Venkatesh. I am an environmental enthusiast. This project, directly or indirectly, provides 90% of employment opportunities. Priority should be given to local people in these opportunities. Secondly, native tree species should be planted extensively to control pollution. Planting these trees will reduce both environmental and noise pollution. Furthermore, local groups or members should be empowered to resolve issues. Thank you for this opportunity

With this the Revenue Divisional Officer concluded that public hearing is completed. Accordingly District Environmental Engineer conveyed it in the meeting that Public hearing is completed and now the floor is open if anyone wishes to handover written opinions to hand it over to the Revenue Divisional Officer. 10 people asked the permission and submitted their written opinion to Revenue Divisional Officer. He received the written opinions one by one with video recording of the same. District Environmental Engineer also informed people that they can send their representations through mail or through post on the shared mailing address and E-Mail ID.

Finally the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dindigul District informed that written petitions have been received and they will be sent to the Tamil Nadu State Level Environmental Impact Assessment Authority. He thanked everyone who attended this public hearing.

He also said that the Public hearing has been concluded. 10 written petitions received from the public during the public hearing regarding the proposed Common Bio-Medical Waste Treatment Facility project is attached herewith.

Furthermore, petitions have been received from the public in the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dindigul District either in writing or through E-mail regarding the setting up of the proposed Common Bio-Medical Waste Treatment Facility project at Noothalpuram Village, Dindigul District are attached herewith.

The list of participants in the above public hearing and the video CD, video, sound recording and photographs of the proceedings of the meeting are attached herewith. Also, few petitions were received on the platform are also attached.

The Proceedings of the Public Hearing and the Petitions received are enclosed herewith. Also, the representations/E-mail written letters received from the public regarding the proposed Treatment Facility at District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dindigul District.

| | |
|---|---|
| 28/8/24 | 29/8/24 |
| **District Environmental Engineer,** | **Revenue Divisional Officer,** |
| **Tamil Nadu Pollution Control Board,** | **Dindigul** |
| **Dindigul** | |

07-

022643

(1)

***திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நூத்துலாபுரம் கிராமம், சர்வே எண் : 133/1A2 மற்றும் 154/11 பட்டா நிலத்தில் 0.7165 ஹெக்டேர் (1.77 ஏக்கர்) நிலப்பரப்பில் அமைந்துள்ள தி/ள். திண்டுக்கல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட 19 TPD (6835 TPA) திறனுடைய பொதுவான உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு வசதி ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச் சுழல் அனுமதி பெறும் பொருட்டு 28.08.2024 அன்று திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், எஸ்.தும்மலப்பட்டி கிராமம், பாலசுப்ரமணியர் கோவில் வளாகம் அருகில் சோழிய வெள்ளாளர் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அன்னதான மண்டபத்தில் காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்***

***<u>பங்கேற்றோர்</u> :***

***<u>திருவாளர்கள்:</u>***

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. இரா. சக்தி வேல் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>திண்டுக்கல் மாவட்டம் |
| 2. | முனைவர். இரா. குணசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்,<br>திண்டுக்கல் மாவட்டம் |
| 3. | திரு. தனுஷ்கோடி | : | வட்டாட்சியர்,<br>நிலக்கோட்டை வட்டம் |
| 4. | திருமதி. அனிதா | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்,<br>திண்டுக்கல் மாவட்டம் |
| 5. | திருமதி. ப. விஜயலட்சுமி | : | இயக்குனர்,<br>தி/ள். திண்டுக்கல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட்லிமிடெட் |
| 6. | திரு .ஜி. முத்துக்குமரன் | : | EIA ஆலோசகர்,<br>தி/ள். பெர்ஃபாக்ட் |

| | | | |
|---|---|---|---|
| | | | என்விரோசொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், புது தில்லி |
| 7. | பொது | | ..................... (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது ) |

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நூத்துலாபுரம் கிராமம், சர்வே எண்:133/1A2 மற்றும் 154/11 பட்டா நிலத்தில் 0.7165 ஹெக்டேர் (1.77 ஏக்கர்) நிலப்பரப்பில் அமைந்துள்ள தி/ள்.திண்டுக்கல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட 19 TPD (6835 TPA) திறனுடைய பொதுவான உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு வசதி ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச் சுழல் அனுமதி பெரும் பொருட்டு பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தலைமை ஏற்று நடத்திக் கொடுத்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள், முன்மொழியப்பட்ட 19 TPD (6835 TPA) திறனுடைய பொதுவான உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு வசதி ,0.7165 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஏற்படுத்துவதற்காக மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், நிலக்கோட்டை வட்டாட்சியர் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், ஊடகங்கள், சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் வரவேற்றார். திட்டத்திற்காக. தமிழ்நாடு மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து பெற வேண்டிய சுற்றுச்சூழல் அனுமதியானது (EC)2006 EIA அறிவிக்கையின் அட்டவணை நடவடிக்கை 7d(a), B1 வகையின் கீழ் வருவது குறித்து விளக்கினார். கூட்டம் நடத்துவதை பற்றிய அறிவிப்பு 04.07.2024 தேதியிட்ட "தினகரன்" மற்றும் " நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" போன்ற தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்புக்குக் கூடுதலாக, சிறப்பு அறிவிப்புகளை பஞ்சாயத்து அலுவலகம், தாலுகா அலுவலகம் மற்றும் அப்பகுதியில் உள்ள பிற அரசு அலுவலகங்களில் காண்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார். மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம்

நடத்துவதற்கு முன், துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டது, சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் மைக் மற்றும் ஸ்பீக்கர் பொருத்தப்பட்ட வாகனம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது. திட்ட முன்மொழிபவர் சார்பாக, முன்மொழிபவரின் EIA ஆலோசகர் திட்டம் பற்றி விளக்கமளிப்பார் என்றும் பவர் பாயின்ட் விளக்கக்காட்சிக்குப் பிறகு பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

கூட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை முழுமையாக வீடியோ & ஆடியோ பதிவு செய்யப்பட்டு பொதுமக்களின் அனைத்து கருத்துகளும் பதிவு செய்யப்படும் என்றுமாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அறிவித்தார். பதிவு செய்யப்பட்ட வீடியோகிராபி மற்றும் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள் முடிவெடுப்பதற்காக தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும். இந்த கூட்டத்தில் அனைத்து பொதுமக்களின் கருத்துகளையும் பதிவு செய்வது மட்டுமே செய்யப்படும் என்றும் எந்த முடிவும் எடுக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார். தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க விரும்பும் பொதுமக்கள் கூட்டத்தின் முடிவில் வருவாய் கோட்டாட்சியரிடம் கடிதங்களை அளிக்கலாம் என்றும், அவை தொகுக்கப்பட்டுதமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுமக்களிடம் கலந்து கொண்டு கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது குறித்து வருவாய் கோட்டாட்சியர் விளக்கி, இன்று கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தங்கள் கருத்துகளை சுதந்திரமாக தெரிவிக்க சம வாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறினார். அனைவருக்கும் நேரம் கொடுக்கும் வகையில், குறுகிய மற்றும் சுருக்கமாக பேசுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

அதன் பின்,முன்மொழியப்பட்ட *19 TPD (6835 TPA)* திறனுடைய பொதுவான உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு வசதி, *0.7165* ஹெக்டேர் *(1.77* ஏக்கர் *)* நிலப்பரப்பில் ஏற்படுத்துவதைக் குறித்து திரு.ஜி.முத்துக்குமரன், EIA ஆலோசகர், தி/ள். பெர்ஃபாக்ட் என்விரோசல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், புது தில்லி பவர்பாயிண்ட் விளக்கக்காட்சி மூலம் விளக்கமளித்தார் . சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு முடிவுகள் மற்றும் முன்மொழியப்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் மற்றும்

கண்காணிப்புத் திட்டத்துடன் தணிக்கும் நடவடிக்கையுடன் பொதுமக்களுக்கான திட்டம். அண்டை கிராமங்களின் வளர்ச்சிக்காக கார்ப்பரேட் சுற்றுச்சூழல் நிதி @ INR 5.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதையும் அவர் விளக்கினார்.

சுற்றுச்சூழல் ஆய்வு ஆலோசகர் வழங்கிய பவர்பாயிண்ட் விளக்கக்காட்சி முடிவடைந்ததை தொடர்ந்து, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், பொதுமக்கள் முன் வந்து கழிவு சுத்திகரிப்பு நிலையம் சம்பந்தமாக தங்கள் கருத்துகளை பதிவு செய்ய அழைப்பு விடுத்தார்.

**பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் கருத்துக்கள் பின்வருமாறு:**

**திரு . கோபால், தும்மலப்பட்டி கிராமம்**

என் பெயர் கோபால் தும்மலப்பட்டி கிராமம்.மருத்துவ கழிவுகளை எரித்தாலோ அல்லது சுத்திகரித்தாலோ சுற்றுச்சூழல் கண்டிப்பாக பாதிக்கப்படும்.எனவே இத்திட்டம் இந்தப் பகுதிக்கு தேவை இல்லை. மாசு கட்டுப்பாட்டு அதிகாரிகள் இருக்கிறார்கள் அவர்களுக்கு தெரியாதது பாமர மக்களுக்கு எப்படி தெரியும். இந்தக் கூட்டத்தை வெறும் கண் துடைப்பிற்காக நடத்துகிறார்கள். இதனால் பாதிப்பு வரும் என்று முன்னதாகவே நான் சொல்கிறேன். எங்கள் உடம்பெல்லாம் ஏற்கனவே பாதிப்படைந்துள்ளது. இதற்கு அரசு தான் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் நன்றி.

**திருமதி. இந்திராணி, எஸ்.தும்மலப்பட்டி கிராமம்**

என் பெயர் இந்திராணி. நான் எஸ்.தும்மலப்பட்டி கிராமத்தில் இருந்து வரேன். எங்கள் பகுதில் ஆடு மாடு போன்ற உயிர் இனங்கள் அதிகமாக வழக்கப்பட்டு வருகின்றன. சில நேரங்களில் பல விலங்கினங்கள் இறந்து போகும் நிலை ஏற்படுகிறது.இது போன்ற இறந்த விலங்குகளையும் இந்த சுத்திகரிப்பு மையத்தில் முறையாககையாள வேண்டும் .இது, இந்த பகுதி மக்களுக்கு மிகவும் நன்மை தரும். பெரும்பாலான மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும். நன்றி.

**திரு . ஜெயமணிகண்டன், எஸ்.தும்மலப்பட்டி கிராமம்**

என் பெயர் ஜெயமணிகண்டன், எஸ்.தும்மலப்பட்டி கிராமம். இந்த மாவட்டம்

ஏற்கனவே பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது அதிலே தும்மலபட்டியில் நீர் மேலாண்மை கிடையாது. அப்படி இருக்கும் பொழுது விவசாயம் ஆடு,மாடுகள் வைத்து தான் எங்கள் பொழப்பு ஓடிக்கொண்டிருக்கிறது எனவே இந்தத் திட்டம் எங்களுக்கு தேவையில்லை இதை தும்மலப்பட்டி சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். ஏனென்றால் இம்மருத்துவ கழிவுகள் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்படைவது போல் ஆடு மாடுகளும் பாதிக்கும் .அது மனிதர்களுக்கும் பாதிப்பை உண்டாக்கும் எனவே எங்களுக்கு இத்திட்டம் தேவையில்லை. நன்றி

**திரு .கருப்பசாமி, எஸ்.தும்மலப்பட்டி கிராமம்**

அனைவருக்கும் வணக்கம் என் பெயர் கருப்பசாமி எஸ்.தும்மலப்பட்டி கிராமம். நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 45% சதவீதம் மருத்துவக் கழிவுகள் உண்டாகிறது இதுவே நம் இந்தியாவை பொறுத்த வரை 700 டன் மருத்துவ கழிவுகள் உண்டாகிறது.அதை எவ்வாறு முறைப்படுத்தினார்கள். இப்படி சொல்லப்போனால் கேரளாவில் இருந்து நம் தமிழக எல்லைப் பகுதியில் தினசரி மருத்துவக் கழிவுகளை கொட்டுகிறார்கள்.நம் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? நம் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?அப்படிப்பட்ட நேரத்திலே இந்தப் பகுதியிலே விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்கும் மக்கள் இவ்வாறு மருத்துவ கழிவு கம்பெனிகள் அமைத்தால் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அது மட்டுமல்லாமல் நிலத்தடி நீர் மிகவும் குடிக்க தகாதவாறு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும் பாதிப்பு அதிகமாக உள்ளது. அது மட்டுமல்லாமல் வருங்காலத்தில் விவசாய நிலம் மிகவும் பாதிப்படையும். எடுத்துக்காட்டுக்கு சொல்லப் போனால் திண்டுக்கல்லில் இருந்து வத்தலகுண்டுக்கு செல்லும் சாலையில் தோல் தொழிற்சாலை உள்ளது தற்போது ஓராண்டு காலமாகத்தான் கழிவுநீர் தேங்காமல் உள்ளது அதற்கு முன் கழிவுநீர் தேங்கி காற்றை மாசுபடுத்தியது இதற்கு அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இப்போது போய் பார்த்தால் தோல் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு முறையாக பாதுகாப்பு இல்லை அதனால் அவர்களின் குடும்பம் பாதிப்படைகிறது. இவ்வாறு இருக்கும் சூழலில் இத்திட்டம் இப்பகுதியில் வரவேண்டாம் .எதன் அடிப்படையில்தேனி, கரூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் அமைக்காத மருத்துவ கழிவு வசதி கம்பெனி , திண்டுக்கல் மாவட்டத்தில் வேறு எந்த கிராமத்தில் அமைக்காமல் எங்கள் நூத்துலாபுரம் கிராமத்தில் அமைவதற்கு என்ன காரணம்? அது இங்கு அமைப்பதற்கு என்ன காரணம். மக்கள் அருகாமையில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் உங்கள் கம்பெனியை அமைத்துக் கொள்ளலாம். இது மிகவும் மக்களுக்கு

தீங்கான ஒன்றாகும். இப்பொழுது அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் மக்களிடம் வந்து கேட்டால் தெரியாது என்றுதான் சொல்வார்கள். ஏனென்றால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் படிப்பறிவில்லாத பாமர மக்கள். இப்பொழுது இங்கே கூறினார்கள் நோட்டீஸ் கொடுத்தோம் என்று. யாரிடம் நோட்டீஸ் கொடுத்தீர்கள்?4 கடையில் மட்டும் கொடுத்தால் போதுமா? பொதுமக்கள் எங்கே இருக்கிறார்கள் அவர்களிடம் வந்து கொடுக்கவில்லையே அதற்கு என்ன காரணம்? என்று எனக்கு தெரியவில்லை. இதன் மூலம் அதிகாரிகள் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது போன்ற கம்பெனி இந்த மக்களுக்கு தேவை இல்லை, இங்கு தேவையில்லை. இப்பொழுது சார் சொன்னார்கள் ஒரு நாளைக்கு பத்து வாகனங்கள் உபயோகப்படுத்தப்படும் என்றும் அவை ஒவ்வொன்றும் மூன்று ட்ரிப் அடிக்கும் என்றும்கூறினார். 30 முறை இவ்வாகனம் வந்து செல்லும். ஆனால், இந்த கம்பெனி ஆரம்பித்தபின் அது 60 ட்ரிப் ஆக மாறும். இதை போய் முறையிட்டால் நீங்கள் அப்பொழுதே சொல்ல வேண்டியது தானே என்று கூறுவார்கள் இது நிதர்சனமான உண்மை ஏனென்றால் இந்த மக்கள் மிகவும் விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்கிறார்கள் மற்ற சிறு தொழிலோ அல்லது வேறு ஏதோ நம்பி இல்லை கிராமங்கள் தோறும் முழுமையான நிலை தலைவர்களுக்கு தெரியவில்லை. இப்பொழுது இங்கு இருப்பவர்களிடம் எதற்கு வந்தீர்கள் என்று கேட்டால் அவர்களுக்கு தெரியாது ஏனென்றால் அப்படி சொல்லி தான் கூப்பிட்டு வந்திருக்கிறார்கள். நான் எதார்த்தமாக இவ்வழியாக சென்றேன் அப்பொழுது தான் எனக்கே தெரிய வருகிறது, சிறுகல்வி பெற்ற எனக்கே இப்போதுதான் தெரிகிறது அப்படி இருக்கும் பொழுது பாமர மக்களுக்கு எப்படி தெரியும்? இதனால் எங்களுக்கு தண்ணீர் வரவில்லை. தண்ணீரை முறையாக பயன்படுத்த முடியவில்லை. மக்கள் மிகவும் பாதிப்பு அடைகிறார்கள். குழந்தைகளும் பாதிப்படைகிறார்கள். திட்டம் உடனடியாக அதிகாரிகள் ரத்து செய்ய வேண்டும் இல்லை என்றால் இது மக்கள் போராட்டமாக மாவட்ட ஆட்சித் தலைவர் முன் நடக்கும் நன்றி வணக்கம்.

**திரு . குமரேசன், மைக்கேல் பாளையம்கிராமம்**

என் பெயர் குமரேசன் .செம்பட்டியில் இருந்து நிலக்கோட்டை ரோடு மைக்கேல் பாளையம் கிராமத்தில் இருந்து வந்திருக்கிறேன். நான் ஒரு விவசாய குடும்பத்தில் இருந்து வந்துள்ளேன். எங்கள் வீட்டில் ஐந்து நபர்கள் விவசாயம் செய்கிறார்கள் அவ்விவசாயத்தால் எங்களுக்கு போதிய வருமானம் இல்லை. நாம் அடிக்கடி வேலை வாய்ப்பு இல்லை என மத்திய அரசிடம் மற்றும் மாநில அரசிடம் கேட்டிருக்கிறோம்.அவர்கள் எப்படிப்பட்ட வேலையை பரிந்துரைப்பார்கள்? எடுத்துக்காட்டாக இப்பொழுது மழை பெய்கிறது, அதனால் காய்ச்சல் அடிக்கிறது.

இதன் காரணமாக ஆஸ்பத்திரிக்கு சென்றால் ஊசி போடுவார்கள் மற்றும் குளுக்கோஸ் ஏற்றுவார்கள்.நமக்கு பயன்படுத்திய ஊசி மற்றும் பிற கழிவுகளை எப்படி சுத்திகரிப்பார்கள்? அவற்றை தரம் பிரித்து ரீபிராசசிங் செய்வார்கள்.இல்லை எனில் அவற்றை வெளியில் போட்டு எரிப்பார்கள் இதனால் விவசாயிகளுக்கு தான் பாதிப்பு. அதாவது நம் பூமித்தாய் எந்த அளவிற்கு எரிக்கப்படுகிறது அதே அளவிற்கு சுடப்படுகிறது. மருத்துவம் நமக்குத் தேவை, இன்றைய உணவு பழக்கம், பொருளாதார சூழ்நிலை அந்த கழிவை எப்படி நீக்குவது. அதை சார் விளக்கமாக சொன்னார்கள். ஒரோர் வகை எப்படி நாங்கள் பிராசஸ் பண்ணுவோம் காலமாற்றத்திற்கு ஏற்ப மாறுதல் அவசியம்.அப்போது நாம் சாதாரண செல்போன் வைத்திருந்தோம் இப்பொழுது டிஜிட்டல் செல் வைத்திருக்கிறோம்எதுவுமே பாதிப்பு என்றால் எல்லாம் பாதிப்பு தான். நான் நிலக்கோட்டை சேர்ந்தவன்.என் கிராமம் மைக்கேல் பாளையம்.

***(சலசலப்பு)***

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,** திண்டுக்கல் மாவட்டபொதுமக்களை நோக்கி அறிவித்தார்."அமைதியாக இருங்கள் அமைதியாக இருங்கள். அவருக்கு பேச உரிமை இருக்கிறது அவர் பேசட்டும் நீங்கள் அமைதியாக இருங்கள்.சரி உட்காருங்கள் உட்காருங்கள் "

**வருவாய்கோட்டாட்சியர்,** திண்டுக்கல் மாவட்ட பொதுமக்களை நோக்கி அறிவித்தார் - கொஞ்சம் அமைதியாக இருங்கள் இந்த கூட்டம் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அல்ல இது உங்கள் கருத்துக்களை கேட்பதற்காக மட்டுமே. இறுதியாக இத்திட்டம் இங்கு வரும்பொழுது நீங்கள் போராட்டம் செய்யலாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் இப்பொழுது இங்கு கருத்து கேட்பு கூட்டம் மட்டுமே. இங்கு எல்லோரும் தங்கள் கருத்துக்களை மட்டும் பதிவு பண்ணலாம். உங்கள் அனைத்து கருத்துக்களையும் ஏற்று எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு பெரும்பான்மை வகையில் தான் அரசு முடிவெடுக்கும். இத்திட்டத்திற்கு மனு தான் கொடுத்து இருக்கிறார்கள், இது உடனடியாக அமலுக்கு வரப்போவதில்லை இது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் மட்டுமே உங்கள் கருத்துக்களை தான் நாங்கள் கேட்கிறோம். அமைதியாக இருங்கள்.

***திரு. சுரேஷ்குமார் (வழக்கறிஞர்), எஸ்.தும்மலப்பட்டி கிராமம்***

இது கருத்து கேட்பு கூட்டம் என்பது சரி சார். இதில் நூத்துலாபுரம் கிராமத்தில் இருக்கும் மக்கள் கருத்து சொல்லலாம் ,எங்களுடைய நிபந்தனை இதுதான்.

நூத்துலாபுரத்தில் இந்த ஆலை வந்தால் தும்மலப்பட்டி கிராமம் தான் பாதிக்கப்படும்.அவர் மைக்கேல் பாளையத்திலிருந்து வந்து வேலை பார்த்து விட்டு செல்வார். ஆனால் பாதிப்பு என்னவோ நூத்துலாபுரம் கிராமத்துக்கு தான். ஏனென்றால் இங்கு ஆடு மாடுகளை வைத்து தான் நாங்கள் எங்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறோம் இதனால்தான் எங்களுக்கு இந்ததிட்டம் தேவையில்லை என்று சொல்கிறோம். மைக்கல்பாளையத்திலிருந்து இத்திட்டம் வேண்டும் என்று கூறினால்பெரும்பான்மையான நூத்துலாபுரம் கிராம மக்கள் வேண்டாம் என்று தான் சொல்கிறார்கள் மைக்கேல் பாளையத்திலிருந்து வந்து வேண்டும் என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் .வேண்டுமென்று நூத்துலாபுரம் கிராம மக்கள் சொல்லட்டும். அவரை மைக்கேல்பாளையத்திலிருந்து கம்பெனி நபர்களேகூட்டி வந்திருக்கிறார்கள்என்று நாங்கள் சொல்கிறோம்.நூத்துலாபுரம் என்பது 9 கிராமம். இக்கிராமத்தில் இருப்பவர்கள் கருத்து சொல்லட்டும். மற்ற பகுதிமக்கள் இங்கு கருத்து சொல்லக் கூடாது

**திரு .கே.மாரிமுத்து, நூத்துலாபுரம் கிராமம்**

*இந்தக் காமராஜர் அணையின் தண்ணீர் செல்லும் வழி இதுதான்.இந்த நூத்துலாபுரம் கம்மாயி வழியாகத்தான் செல்லும். எனவே இந்த ஆலையினால் நீர் மாசுபடும் அதனால் எங்களுக்கு இந்த ஆலை தேவையில்லை.*

***( சலசலப்பு )***

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** - பொதுமக்கள் யாராவது பேசுவதற்கு விரும்புகிறீர்களா சொல்லுங்கள் விருப்பம் இருந்தால் வந்து பேசலாம் அடுத்து யாரிடமாவது எழுத்துப்பூர்வமான மனுக்கள் இருந்தால் வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுக்கலாம்.

**திரு .சுரேஷ்குமார் (வழக்கறிஞர்), எஸ்.தும்மலப்பட்டி கிராமம்**

கொஞ்சம் அமைதியாக இருங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள் முதலில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். இந்த திட்டத்தின் மூலமாக மக்களுக்கு என்னென்ன பாதிப்பு ஏற்படும் இதனால் எந்தெந்த மாவட்டத்திற்கு பிரச்சனை ஏற்பட்டு இருக்கிறது என்பதை அதிகாரிகள் விளக்கப்படுத்திவிட்டு பொதுமக்களின் கருத்துக்களை கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன் இந்த மருத்துவ கழிவினால் எந்தெந்த நோய்கள் வரும் என்று அருகில் இருக்கும் கிராமங்கள் எவ்வளவு பாதிப்படையும் என்பதை தெரியப்படுத்திவிட்டு கருத்துக்களை கேட்கலாம். இதைப் போல் விருதுநகரில் நடந்தது அங்கிருக்கும் மக்கள் ஸ்டே ஆர்டர் பெற்றிருக்கிறார்கள். உயர்

நீதிமன்றம் உத்தரவின் மூலம் அங்கு ஆலை திறக்கப்பட்டது.அங்கிருக்கும் மக்கள் பெரும்பாலானவர்கள் நோயால் பாதிப்படைந்து இருக்கிறார்கள் இது காற்றின் மூலமாக பரவும். இவர்கள் கழிவுகளை எரித்து, ஒரு பைப்பின் மூலம் அந்தப் புகை வெளியே வரும் அதனை வகைப்படுத்துவார்கள் இதனால் நீர் மற்றும் காற்று மாசுபடும். நாம் விவசாய பெருமக்கள். இதனால் விவசாயம் பாதிக்கப்படும், மக்கள் பாதிப்படைவார்கள். இதை அரசு அதிகாரிகள் மூலம் என்னென்ன பாதிப்பு ஏற்படும் என்று இதனால் எவ்வளவு இழப்பு மற்றும் நன்மைகள் ஏற்படும் என்று நமக்குத் தெரியாது ஏனென்றால் நாம் பாமர மக்கள் படிக்காதவர்கள். அரசு அதிகாரிகள் இத்திட்டத்தைப் பற்றி விளக்கம் அளித்த பின் நாம் நம் கருத்துக்களை சொல்லுவோம். நீங்கள் எப்படி சுத்திகரிப்பீர்கள் எப்படி ஆலைக்குள் கொண்டு வருவீர்கள் என்பதை அவர்கள் விளக்கப்படுத்தியதற்குப் பின் நாம் நம் கருத்துக்களை எடுத்துரைப்போம். நன்றி

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்** - பெண்களில் யாராவது பேச விரும்பினால் பேசலாம்.

**(ஒருவரும் வரவில்லை)**

**வருவாய் கோட்டாட்சியர்** - கொஞ்சம் அமைதியாக இருங்கள். அமைதியாக இருங்கள்.நான் ஏற்கனவே சொன்னது போல் இந்த திட்டத்திற்கு மனு தான் கொடுத்திருக்கிறார்கள் இதை ஒப்புதல் செய்து உங்கள் ஊருக்கு கொண்டு வரவில்லை. இப்பொழுது இவர்கள் மனு தான் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது இது வேண்டுமா வேண்டாமா என்பதையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளை பற்றி கேட்க வந்திருக்கிறோம். உங்களுடைய கருத்துக்களை அரசாங்கமிடம் கொண்டு செல்வதற்காக தான் நாங்கள் கேட்கிறோம். எனவே உங்கள் கருத்துக்களை தெளிவான முறையில் சொல்லவும். இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்த போவது இல்லை அமைதியாக இருங்கள் சொல்பவர்கள் தாங்கள் கருத்துக்களை சொல்லி முடிக்கட்டும் .

**திரு . கே. மாரிமுத்து, நூத்துலாபுரம் கிராமம்**

காமராஜர் அணை வழியாக செங்கட்டாம்பட்டி வழியாக வரும் தண்ணீரால் நூத்துலாபுரம் கிராம மக்கள் பாசனம் செய்கிறார்கள் .நாளை தண்ணீர் மாசுபடும் என்ற நிலைமை ஏற்பட்டால் நூத்துலாபுரம் கிராம மக்கள் மிகவும் பாதிப்படைவார்கள். அருகில் இருக்கும் செம்பட்டி கிராமத்தில் ஒரு சாதாரண வட்ட மில் சின்னதாக ஆரம்பித்தார்கள் இப்பொழுது அது எவ்வளவு பெரிதாகிவிட்டது அது தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ளது அதனால் எவ்வளவு விபத்துகள் ஏற்பட்டு இருக்கின்றன

அவை எவற்றையும் அதிகாரிகள் வந்து பார்க்கவில்லை. செம்பட்டியில் இருக்கும் கிராம மக்கள் குடிக்கும் தண்ணீர்காக தினமும் 20 ரூபாய் கொடுத்து வாங்கி குடிக்கிறார்கள். அந்த வட்டமில் வந்ததற்குப் பின் நிலத்தடி நீர் முற்றிலுமாகபாதிப்படைந்துவிட்டது. எனவே இந்த கிராமம் அருகில் நீர் நிலைகள் இருப்பதால் நாளை நிலத்தடி நீரோ அல்லது பல நோய்கள் வருவதற்கான அச்சுறுத்தல் இருப்பதால் எங்களுக்கு இந்த ஆலை தேவையில்லை. நன்றி .

**திரு .வெங்கடேஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர்**

மதிப்பிற்குரிய ஐயா, அனைவருக்கும் காலை வணக்கம், என் பெயர் வெங்கடேஷ். சுற்றுச்சூழல் ஆர்வலர்களில் ஒருவர்.இந்த திட்டம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 90% வேலைவாய்ப்பை வழங்குகிறது. அதில் உள்ளூர் மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அடுத்ததாக, மாசு கட்டுப்படுத்தும் வகையிலான உள்ளூர் மர இனங்களை அதிகம் நட வேண்டும் அவை நடுவதால் சுற்றுச்சூழல் மாசு மற்றும் இரைச்சல் மாசுபாடு குறையும்.மேலும் உள்ளூர் குழு அல்லது உறுப்பினர்களால் பிரச்சனைகளை தீர்க்கப்பட வேண்டும். வாய்பளித்ததற்கு நன்றி. வணக்கம்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இத்துடன் கருத்துக்களை பதிவு செய்வது முடிவு பெற்றது என்று அறிவித்தார். யாரேனும் எழுத்துப்பூர்வமான அறிக்கைகளையும் கருத்துக்களையும் பதிவு செய்ய வேண்டும் என்றால் நேரடியாக மேடைக்கு வந்து தலைமையேற்று நடத்தும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் நேரில் கொடுத்து சமர்ப்பிக்கலாம் என்று கேட்டுக்கொண்டார். இதனை ஏற்று பொதுமக்களில் இருந்து 10 நபர்கள் தாங்கள் ஏற்கனவே எழுதி வைத்திருந்த கடிதங்களை. வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் சமர்ப்பித்து புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவும் மேற்கொண்டனர். தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மின் அஞ்சல் மூலமாகவும் கடிதம் மூலமாக யாரேனும் அனுப்பவிரும்பினால் அவை அனுப்புவதற்கான முகவரியும் கொடுத்துவிட்டு இத்துடன் இந்த நிகழ்ச்சி நிறைவு பெறுவதாக மாவட்ட பொறியாளர் அவர்கள் தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மத்திய மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக்கொண்டார். இந்த பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்திற்கு வந்து இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் முடிவு பெற்றதாக தெரிவித்தார். முன்மொழியப்பட்ட பொதுவான உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு வசதி அமைப்பது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்புக்கூட்டத்தின் போது பொதுமக்களிடம் பெற்றப்பட்ட 10 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், உத்தேசிக்கப்பட்ட பொதுவான உயிரி மருத்துவ கழிவு சுத்திகரிப்பு வசதி அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமாக மற்றும் மின்னஞ்சல் வழியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்புக்கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலிப்பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகள் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

28/8/24

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திண்டுக்கல்**

28/8/24

**வருவாய் கோட்டாட்சியர்,**
**திண்டுக்கல்**